www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# நான்காம் வகுப்பு

## பருவம் – III

## தொகுதி – 2

# கணக்கு
# அறிவியல்
# சமூக அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

# பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



4th_Introduction_Term 3 TM_FM.indd 2
11/25/2019 1:23:35 PM

www.tntextbooks.in

# சமூக அறிவியல்



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 99 11/22/2019 5:17:32 PM

www.tntextbooks.in

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | உலகெலாம் தமிழர்கள் | 101 | ஜனவரி |
| 2 | மதராஸ் மாகாணத்தின் வரலாறு | 113 | பிப்ரவரி– மார்ச் |
| 3 | குழந்தைகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் | 126 | மார்ச்– ஏப்ரல் |


I4G3C3

மின்நூல்

I6J5Q9

மதிப்பீடு

B325_4_SOCIAL_TM

இணைய வளங்கள்



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 100 11/22/2019 5:17:33 PM

# அலகு 1 உலகெலாம் தமிழர்கள்






H9N9B3

## கற்றல் நோக்கங்கள்

**மாணவர்கள் கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்**

- தமிழர்கள் வாழும் நாடுகளைப் பட்டியலிடுதல்
- பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டை அறிதல்
- நாணயங்களில் அல்லது அலுவலக மொழிகளுள் ஒன்றாகத் தமிழைக் கொண்டிருக்கும் நாடுகளின் பெயர்களைக் கூறுதல்

# அறிமுகம்

பண்டைய தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருந்தது. எகிப்து, சீனா, மியான்மர், ஜப்பான், ரோம் மற்றும் பல நாடுகளுடன் நாம் வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தோம். கி.மு.(பொ.ஆ.மு.) 3 ஆம் நூற்றாண்டு முதலே மேற்கு நாடுகளுடன் நாம் வணிகத் தொடர்புகளை கொண்டுள்ளோம். சீனா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்குக் கடல் வழியாகப் பயணம் மேற்கொண்ட பல கப்பல்கள், நமது துறைமுகங்களைப் பயன்படுத்தின. கிழக்கிலுள்ள நாடுகளுடன் வணிக மற்றும் பண்பாட்டு உறவுகளை விரிவுபடுத்த ராஜேந்திர சோழரின் கடற்படையெடுப்பு உதவியது.

## உலக வரைபடம்






4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 102 11/22/2019 5:17:37 PM

# இலங்கை

இலங்கையில் தமிழர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர். அங்கு தமிழர்கள் இரண்டு குழுக்களாக வாழ்கின்றனர். முதல் குழுவில் இலங்கையில் வாழும் தமிழர்கள் உள்ளனர். இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மற்றொரு குழுவில், இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடிபெயர்ந்த தமிழர்கள் உள்ளனர். இந்தியத் தமிழர்கள் என்று அழைக்கப்பட்ட இவர்கள், 19ஆம் நூற்றாண்டில் தேயிலைத் தோட்ட வேலைக்காகக் குடிபெயர்ந்தவர்கள் ஆவர். இலங்கையின் அலுவலக மொழிகளுள் ஒன்று, தமிழாகும்.

அங்குள்ள கோனேஸ்வரம் கோயில், ஆயிரம் தூண்களைக் கொண்டுள்ளது. அது ஆசியாவிலேயே புகழ்பெற்றதாகவும் மக்களால் அதிகம் பார்வையிடப்பட்ட கோயில்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.



கோனேஸ்வரம் கோயில்




இலங்கை ரூபாய்




இந்தியா, இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளில் அலுவலக மொழிகளுள் ஒன்றாகத் தமிழும் உள்ளது.

# மலேசியா

தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள மலேசியா ஒரு **தீபகற்பம்** ஆகும். தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் இடையிலான உறவுகள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். பண்டைய காலங்களில் தமிழர்களின் கப்பல்கள் தற்போதைய மலேசிய மாநிலமான **கெடாவை** (தமிழில் **கடாரம்**) அடைந்தன. பல்லவர்கள் மற்றும் சோழர்களின் காலத்தில், மலேசியாவின் பண்பாடு மற்றும் அரசியலில் தமிழர்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினர். நாகப்பட்டினத்திலிருந்து கெடாவுக்கு வழக்கமான போக்குவரத்து இருந்ததாக **இட்–சிங்** என்ற சீனப் பயணியின் ஆவணம் தெரிவிக்கிறது.

மலேய தீபகற்பத்தின் லிகோர் என்னும் இடத்தில் கி.பி.(பொ.ஆ.) 779ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு மலேய தீபகற்பத்துடன் தமிழ்நாடு கொண்டிருந்த வணிக உறவைக் குறிப்பிடுகிறது. இன்று மலேசியாவில், மலாயர்கள் மற்றும் சீனர்களுக்கு அடுத்தபடியாகத் தமிழர்கள், மக்கள்தொகையில் மூன்றாவது பெரிய இனத்தவராக உள்ளனர். மலேசியாவில் கொண்டாடப்படும் இந்து பண்டிகைகளில் ஒன்று **தைப்பூசம்** ஆகும். மலேசியாவின் **பயிற்றுமொழி**களுள் தமிழும் ஒன்றாகும்.




தமிழ்மொழியின் வளர்ச்சி குறித்து விவாதிப்பதற்காக **உலகத் தமிழ் மாநாடுகள் மலேசியாவில் மூன்று முறை** நடத்தப்பட்டன.



பத்துமலை முருகன் கோயில்

**பத்துமலை** என்பது, மலேசியாவின் கோம்பாக் மாவட்டத்தில் உள்ள ஒரு சுண்ணாம்புக் குன்றாகும். அது தொடர்ச்சியான குகைகள் மற்றும் குகைக் கோயில்களைக் கொண்டு உள்ளது. பத்துமலையின் அடிவாரத்தில் உள்ள முருகன் சிலை, உலகின் **இரண்டாவது மிக உயரமான** இந்து தெய்வ சிலை ஆகும்.



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 104 11/22/2019 5:17:43 PM

# சிங்கப்பூர்

புகழ்ப்பெற்ற ஆங்கிலேய அரசியல் அறிஞரும் துணைநிலை ஆளுநருமான சர் தாமஸ் ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸ் என்பவரால் நவீன சிங்கப்பூர் கி.பி.(பொ.ஆ.) 1819இல் நிறுவப்பட்டது. சிங்கப்பூரின் உண்மையான வரலாறு இங்கிருந்துதான் தொடங்குகிறது. ஆனால் இந்த தீவுடன் அதற்கு முன்பே தமிழர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரை ஆட்சி செய்தபோது, தமிழர்கள் தொழிலாளர்களாகவும் வணிகர்களாகவும் அங்கு சென்றனர். சிங்கப்பூரின் வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலுக்கு தமிழர்களின் கடின உழைப்பும் ஒரு காரணம் ஆகும்.

R1W7V2




சிங்கப்பூரில் 1828ஆம் ஆண்டு மாரியம்மன் கோயில் ஒன்று கட்டப்பட்டது. அது தமிழர்களால் திராவிடக் கட்டட முறையில் கட்டப்பட்டது. மேலும் அக்கோயில் சிங்கப்பூரின் தேசிய நினைவுச்சின்னமாக அரசிதழில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டில் சிங்கப்பூரின் தொடக்கக் காலங்களில், சிங்கப்பூர் பிரிட்டிஷ் அரசு மற்றும் கிறித்துவ அமைப்புப் பள்ளிகள், தமிழர்களை மட்டுமே ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்தன. தற்போது அங்கு வாழும் தமிழ்ச் சமூகத்தில் வழக்குரைஞர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோர் உள்ளனர்.

ஜொகூர் பாலம், செம்பவாங் கப்பல் கட்டும் தளம், கல்லாங் விமான நிலையம் மற்றும் புனித ஆண்ட்ரூ கதீட்ரல் ஆகியன தமிழர்களின் கடின உழைப்பின் அடையாளங்கள் ஆகும்.



கல்லாங் விமான நிலையம்

## பிஜி

Y2B7L4

பிஜி என்பது, தென் பசிபிக் பகுதியில் உள்ள எரிமலை தீவுக் கூட்டமாகும். 1903ஆம் ஆண்டு முதல் 1916ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில், தமிழர்கள் தொழிலாளர்களாக பிஜி தீவுகளுக்கு ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டனர்.

சம உரிமைகளுக்கான தேவைக்கு பிஜியில் வாழும் தமிழர்கள் எப்போதுமே குரல் கொடுத்துள்ளனர். இதன் ஒரு பகுதியாக 1938 ஆம் ஆண்டில் இந்திய சன்மார்க்க மகளிர் சங்கம் என்ற ஒரு பெண்கள் பிரிவு உருவாக்கப்பட்டது. அதன் நோக்கம் ஏழை மற்றும் பசியுடன் உள்ள தமிழர்களுக்கு உணவளிக்க ஒவ்வொரு நாளும் சமைப்பதற்கு முன்பு ஒரு கையளவு அரிசியை ஒதுக்குவதுதான்.

பிஜி நாட்டின் துணை ஜனாதிபதி ரத்து ஜோனி என்பவர் திருக்குறளி என்ற புத்தகத்தை அறிமுகப்படுத்தினார். அவர் பிஜியில் அமைதி மற்றும் பன்முக பண்பாட்டை வளர்க்க இப்புத்தகம் உதவும் என்று கூறினார். இது நமது பண்டைய தமிழ் நூலான 'திருக்குறளைத்' தழுவிய பிஜி மொழியின் பதிப்பாகும்.

இந்து கோயிலான சிவசுப்பிரமணியர் கோயில், பிஜி நாட்டின் நண்டி என்னும் இடத்தில் அமைந்துள்ளது.



சிவசுப்பிரமணியர் கோயில்

## மியான்மர்(பர்மா)

மியான்மர் நமது அண்டை நாடு ஆகும். அங்குள்ள பெரும்பாலான மக்கள் புத்தசமயத்தைப் பின்பற்றுகின்றனர். தமிழகத்திற்கும் மியான்மருக்கும் இடையிலான பண்பாடு மற்றும் வணிக உறவுகள் பெரும்பாலும் கடல் வழியாகவே இருந்தன.

அனவர்தா மின்சா என்ற மன்னர் மியான்மரில் ஒரு பேரரசை நிறுவினார். அவர் மியான்மரின் தேசத் தந்தையாகவும், மிகவும் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவராகவும் கருதப்படுகிறார். இவரின் மகன் மன்னர் கியான்சித்தா, தமிழகத்தின் சோழப் பேரரசுடன் நல்லுறவைக் கொண்டிருந்தார்.



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 106 11/22/2019 5:17:47 PM




மியான்மரில் உள்ள பாகாங் என்ற நகரத்தில், கி.பி.(பொ.ஆ.) 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் தமிழ்மொழி இடம் பெற்றுள்ளது. அக்கல்வெட்டில், சேர நாட்டைச் சேர்ந்த **குலசேகர நம்பி** என்ற வணிகர் மியான்மரில் உள்ள **திருமால் கோயிலுக்கு** நன்கொடை வழங்கினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1850ஆம் ஆண்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் குடிபெயர்ந்து விவசாயத் துறைகளில் பணியாற்றினர். அந்நாட்டில் இந்தியர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டைகள் கலவரங்களுக்கு வழிவகுத்தன. இதனால் மியான்மரைவிட்டு ஏராளமான தமிழர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மியான்மரில், இந்து கடவுள்களான மாரியம்மன், முருகன் மற்றும் திருமால் போன்றவர்களின் கோயில்கள் இருக்கின்றன.




ஆனந்தா கோயில் மியான்மரிலுள்ள புகழ்பெற்ற கோயிலாகும். இந்தக் கோயிலின் கோபுரம் **திராவிட கட்டட முறையில்** கட்டப்பட்டுள்ளது. **வடஇந்தியக் கட்டடக்கலை முறையில்** கோபுரத்தின் மேற்பகுதி கட்டப்பட்டுள்ளது.


ஆனந்தா கோயில்


கோபுரத்தின் மேற்பகுதி



# மொரீஷியஸ்

தொடக்கக் காலங்களில், மொரீஷியஸின் வளர்ச்சிக்குப் போராடிய முதல் நாடு பிரான்ஸ் ஆகும். இந்தியர்கள் திறமையான தொழிலாளர்களாக இருந்ததால், அவர்களைப் பிரெஞ்சுக்காரர்கள் கி.பி.(பொ.ஆ.) 1729ஆம் ஆண்டில் இந்தத் தீவுக்கு அழைத்து வந்தனர்.

புதுச்சேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து தமிழர்கள் பலர், கி.பி.(பொ.ஆ.) 1731 ஆம் ஆண்டு முதல் அழைத்து வரப்பட்டனர். பொதுவாக, இங்கு வாழ்ந்த அடிமைகள் சாதாரண தொழிலாளர்களாகவே இருந்தனர். ஆனால், தமிழர்கள் **திறமையான தொழிலாளர்கள்** மற்றும் **கைவினைஞர்களாக** அங்குச் சென்றனர். தமிழர்கள், இத்தீவை வாழ்வதற்கு ஏற்றதாக மாற்றுவதற்கும், பல கட்டடங்களைக் கட்டுவதற்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவினர்.




1810ஆம் ஆண்டில் மொரீஷியஸ் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர்கள் அத்தீவுக்கு அதிகமான இந்தியர்களை அழைத்து வந்தனர். இப்போது, தமிழர்கள் மொத்த மக்கள் தொகையில் **10 விழுக்காடு** உள்ளனர்.


அஞ்சல் அருங்காட்சியகம்

**அஞ்சல் அருங்காட்சியகம்** 19ஆம் நூற்றாண்டின் அழகிய கற்கட்டடம் ஆகும். அது வரலாற்று நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் **போர்ட் லூயிஸில்** தமிழர்களால் கட்டப்பட்டது.



மொரீஷியஸ் ரூபாய்



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 108 11/22/2019 5:17:53 PM

# ரீயூனியன்

மொரீஷியஸ் அருகிலுள்ள ரீயூனியன் என்பது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு தீவு ஆகும். இது **பிரெஞ்சு வெளியுறவுத் துறையின்** ஓர் அங்கமாகும்.

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலிருந்து, தமிழர்களை இத்தீவுக்கு அழைத்து வந்தனர். தொடக்கக் காலங்களில், தமிழர்கள் தேயிலை மற்றும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்தனர். இத்தீவின் மொத்த மக்கள் தொகையில் **நான்கில் ஒரு பங்கிற்குமேல்** தமிழர்கள் இருந்தனர்.

அங்கு, சாதி மற்றும் சமயம் சார்ந்த வேறுபாடுகள் தமிழர்களிடையே இல்லை. இன்றும், பல தமிழர்கள் வேளாண்துறையில் ஈடுபடுகின்றனர். படித்த தமிழர்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் உயர்பதவிகள் வகிக்கின்றனர்.

இத்தீவில் தமிழையும் அதன் பண்பாட்டையும் கற்க, தமிழர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.




கற்பனைக்கெட்டாத **அங்கோர் வாட்** மிகவும் புகழ்பெற்ற மலைக்கோயில்களில் ஒன்றாகத் திகழ்கிறது. **மன்னன் இரண்டாம் சூரியவர்மன்** 12ஆம் நூற்றாண்டில், அதன் 30 ஆண்டுக் கால கட்டுமானத்தைத் தொடங்கினார்.



அங்கோர் வாட் (கம்போடியா)



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 109 11/22/2019 5:17:56 PM




இந்திய நாணயங்களில் மட்டுமல்லாமல், மற்ற மூன்று நாடுகளின் நாணயங்களிலும் தமிழ் இடம் பெற்றுள்ளது. அவை:

1. இலங்கை 2. மொரீஷியஸ் 3. சிங்கப்பூர்




**கனடாவில் தமிழ் பாரம்பரிய மாதம்**

அக்டோபர் 5, 2016 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தைத் தமிழ் பாரம்பரிய மாதமாக கனடா அரசு அறிவித்தது. இது தமிழ்–கனடியர்கள், கனடிய சங்கத்திற்குச் செய்த பங்களிப்புக்கான அங்கீகாரமாக அமைந்தது.

# முடிவுரை

பண்டைய காலங்களில் தமிழர்கள் வணிகர்களாகவும், போர்வீரர்களாகவும் பல நாடுகளுக்கு கடல்வழியாகப் பயணம் மேற்கொண்டனர். தமிழர்களின் கடின உழைப்பே அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது. தாம் ஒரு தமிழர் என்பதில் வெளிநாடு வாழ் தமிழர்கள் எப்போதுமே பெருமிதம் கொள்கின்றனர்.

## சொற்களஞ்சியம்

1. கடற்படையெடுப்பு – போரின் காரணமாக, மேற்கொள்ளும் கடல் வழிப்பயணம்.
2. தீபகற்பம் – மூன்று பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட நிலப்பரப்பு.
3. அடிமை – தன் உரிமையாளருக்குக் கீழ்ப்படிபவர்.
4. தீவு – அனைத்துப் பக்கங்களிலும் தண்ணீரினால் சூழப்பட்ட பகுதி.
5. பன்முக பண்பாடு – சமூகத்தில் உள்ள பல்வேறு பண்பாட்டுக் குழுக்கள்.
6. கலவரம் – அமைதியைக் குலைக்கும் மக்கள் கூட்டம்.
7. போராடு – கடுமையாக முயற்சி செய்.
8. வணிகர் – பொருளை வாங்கி விற்பனை செய்பவர்.

## நினைவு கூர்க

- ❖ இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிஜி, மொரீஷியஸ் மற்றும் ரீயூனியன் போன்ற பல நாடுகளுக்குத் தமிழர்கள் பயணம் மேற்கொண்டனர்.
- ❖ இலங்கை, மொரீஷியஸ் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் நாணயங்களில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது.
- ❖ இலங்கையில் தமிழர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர். இங்கு இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள் என இரு பிரிவாகத் தமிழர்கள் உள்ளனர்.
- ❖ தமிழ் மொழியையும் அதன் பண்பாட்டையும் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள தமிழர்கள் பலரைக் கொண்டுள்ள ஒரு தீவு, ரீயூனியன் ஆகும்.

U8D6E5

# மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இலங்கையின் அலுவலக மொழிகளில் ஒன்று _____________ ஆகும்.

   அ) மாண்டரின் ஆ) இந்தி

   இ) தமிழ் ஈ) சமஸ்கிருதம்

2. நவீன சிங்கப்பூர் _____________ இல் நிறுவப்பட்டது.

   அ) 1819 ஆ) 1820

   இ) 1947 ஈ) 1835

3. பண்டைய காலங்களில், மலேசியாவில் உள்ள கெடா மாநிலம் கடல் வழியாக தமிழ்நாட்டின் _____________ உடன் இணைக்கப்பட்டிருந்தது .

   அ) விசாகப்பட்டினம் ஆ) நாகப்பட்டினம்

   இ) மதுரை ஈ) சென்னை

4. மியான்மரின் முதன்மையான சமயம் _____________ ஆகும்.

   அ) இந்து சமயம் ஆ) சமண சமயம்

   இ) புத்த சமயம் ஈ) சீக்கிய சமயம்

5. ஆங்கிலேயர்கள் மொரீஷியஸைக் கைப்பற்றிய ஆண்டு_____________ ஆகும்.

   அ) 1810 ஆ) 1820

   இ) 1910 ஈ) 1920



4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 111 11/22/2019 5:18:00 PM

### II. சரியா, தவறா என எழுதுக.

1. மலேசியாவில் பல்லவர்களும் சோழர்களும் செல்வாக்கு பெற்றிருந்தனர். (   )
2. தென் பசிபிக் பகுதியில் உள்ள எரிமலை தீவுகளின் கூட்டம் பிஜி ஆகும். (   )
3. மன்னர் அனவர்தா மின்சாவின் மகன் கியான்சித்தா ஆவார். (   )
4. ரீயூனியன் தீவு என்பது, பிரெஞ்சு வெளியுறவுத் துறையின் ஒரு பகுதியாகும். (   )
5. தமிழ்நாட்டில் மட்டுமே தமிழர்கள் வாழ்கின்றனர். (   )

### III. பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. ஆனந்தா கோயில் | – | சர் தாமஸ் ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸ் |
| 2. துணைநிலை ஆளுநர் | – | ரத்து ஜோனி |
| 3. திருக்குறளி | – | நாகப்பட்டினம் |
| 4. அஞ்சல் அருங்காட்சியகம் | – | மியான்மர் |
| 5. பண்டைய துறைமுகம் | – | மொரீஷியஸ் |

### IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் இடையிலான கடந்தகால உறவுகளை விவரிக்கவும்.
2. ரீயூனியன் தீவு – குறிப்பு வரைக.
3. அலுவலக மொழிகளுள் ஒன்றாக தமிழ்மொழியினைக் கொண்ட நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மொரீஷியஸ் நாட்டைக் கட்டமைத்ததில் தமிழர்களின் பங்களிப்பினைக் கூறுக.
5. அ. மலேசியாவில் கொண்டாடப்படும் இந்து பண்டிகை எது?
   ஆ. மியான்மர் நாட்டின் தேசத் தந்தை யார்?

**செயல்திட்டம்**

- ❖ உலக வரைபடத்தை ஒட்டுக.
- ❖ உலகெங்கிலும் பரவிக் காணப்படும் தமிழர்களின் கட்டடக்கலை சார்ந்த படங்களை ஒட்டுக.







4th_Term_3_Social Science_Tamils_around_the_world_Unit_1.indd 112 11/22/2019 5:18:05 PM

www.tntextbooks.in

அலகு 2

# சென்னை மாகாணத்தின் வரலாறு





## கற்றல் நோக்கங்கள்

Q5J3J6



மாணவர்கள் கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்

- மதராஸ்(சென்னை) மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த இன்றைய மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களைப் பட்டியலிடுதல்
- மதராஸ் மாகாணத்தின் வரலாற்றை விவரித்தல்
- மதராஸ் மாகாணத்தின் மாவட்டங்களை அறிதல்
- தமிழ்நாட்டின் சுற்றுலா தலங்களின் பெயர்களைக் கூறுதல்



### மதராஸ் மாகாணம்

மதராஸ் மாகாணம் 1801இல் உருவாக்கப்பட்டது. இது பிரிட்டிஷ் இந்தியாவின் முக்கியமான ஒரு நிர்வாகப் பிரிவு ஆகும். இது மதராஸ் பிராவின்ஸ் என்றும் அழைக்கப்பட்டது. மேலும் இது, புனித ஜார்ஜ் கோட்டையின் மாகாணமாகவும் அதிகாரப்பூர்வமாக அறியப்பட்டது. தென்னிந்தியாவின் பகுதிகளான தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, ஒடிசாவின் சில பகுதிகள் மற்றும் யூனியன் பிரதேசமான இலட்சத்தீவு ஆகியவை அதில் அடங்கும்.






4th_Term_3_Social_Science_Madras Presidency_Unit_2.indd 114 11/22/2019 5:18:51 PM

தற்போது சென்னை என்று அழைக்கப்படும் மதராஸ் நகரம், அன்றைய மதராஸ் மாகாணத்தின் தலைநகரமாக இருந்தது. 1862ஆம் ஆண்டில், இம்மாகாணம் 22 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது 24 மாவட்டங்களாக மாற்றப்பட்டது. பின்னர் 1911இல், தமிழ்நாட்டில் உள்ள வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட், மதராஸ், சேலம், கோயம்புத்தூர், திரிசினோபோலி, தஞ்சாவூர், மதுரா, இராமநாதபுரம், தின்னேவேலி மற்றும் நீலகிரி உட்பட மொத்தம் 26 மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. இம்மாகாணம் 1947 வரை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தது.




மதராஸ் மாகாணத்தின் முதல் பிரிட்டிஷ் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் மற்றும் கடைசி ஆளுநர் ஆர்ச்சிபால்ட் எட்வர்ட் நை ஆவர்.



ஆர்ச்சிபால்ட் எட்வர்ட் நை

### சுதந்திரத்திற்குப் பிறகு

147 ஆண்டுகளுக்குப் பிறகு, மதராஸ் மாகாணம் 1947ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் மதராஸ் மாநிலம் என மறுபெயரிடப்பட்டது.

1956ஆம் ஆண்டில், மதராஸ் மாநிலம் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேலும் அது மதராஸ், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. இது 1969இல் தமிழ்நாடு என அதிகாரப்பூர்வமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் நாட்டின் நான்கு மண்டலங்களைப் பற்றி மேலும் விரிவாக இங்கு காணலாம்.

X5Y3A8

## மண்டலம் I

### சென்னை

அன்றைய மதராஸ் மாவட்டமானது சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய தற்போதைய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. 1639ஆம் ஆண்டு நாயக்கர்களிடமிருந்து ஒரு பகுதி நிலத்தை ஆங்கிலேயர்கள் வாங்கினர். பின்னர் அங்கு புனித ஜார்ஜ் கோட்டையைக் கட்டி, அந்தப்பகுதிக்கு மதராசப்பட்டினம் என்று பெயரிட்டனர்.



புனித ஜார்ஜ் கோட்டை

வரலாற்றுக்கு முந்தைய கற்கருவிகளுக்குப் பெயர் பெற்றவை குடியம் குகைகள் ஆகும். இது தென்னிந்தியாவில் அமைந்துள்ள ஒரு குகை வாழிடமாகும். ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றாக இக்குகை அமைந்துள்ளது.



மாமல்லபுரம்

பல பாறைச் சிற்பங்களை உடைய மாமல்லபுரம் பல்லவ வம்சத்தினரால் உருவாக்கப்பட்டது. இப்பகுதியினை யுனெஸ்கோ நிறுவனம் உலக பாரம்பரிய தளமாக அறிவித்துள்ளது.

தொன்மையான சோழ கிராமமான உத்திரமேரூர் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. உத்திரமேரூரில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் கிராமப்புற சுயாட்சியைப் பற்றி விரிவாக விளக்குகிறது.

### வட ஆற்காடு

வட ஆற்காடு மாவட்டமானது தற்போதைய வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.

வேலூர் கோட்டையானது 1566ஆம் ஆண்டில் சின்ன பொம்மி நாயக்கர் மற்றும் திம்மா ரெட்டி நாயக்கர் ஆகியோரால் கட்டப்பட்ட பழமையான கோட்டை ஆகும்.



வைணு பாப்பு ஆய்வகம்

வைணு பாப்பு ஆய்வகம் ஒரு வானியல் ஆய்வுக்கூடம் ஆகும். இது காவலூரில் அமைந்துள்ளது. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய ஆய்வகமாகும்.

### தென் ஆற்காடு

இன்றைய விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் அன்றைய தென் ஆற்காடு மாவட்டத்தின் பகுதிகளாக இருந்தன.

விழுப்புரம் மாவட்டத்தில், புதுச்சேரிக்கு அருகிலுள்ள ஒரு சோதனை நகரமே ஆரோவில் ஆகும். உலகம் முழுவதிலுமிருந்தும் இங்கு வருகை தரும் மக்கள், பண்பாட்டு ஒற்றுமையின் அடையாளமாகத் திகழ்கின்றனர்.



ஆரோவில்



4th_Term_3_Social_Science_Madras Presidency_Unit_2.indd 116 11/22/2019 5:18:52 PM

செஞ்சிக்கோட்டை தமிழ்நாட்டிலுள்ள அழகான கோட்டைகளில் ஒன்றாகும். இக்கோட்டையானது விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மூன்று குன்றுகள் சூழ்ந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் இக்கோட்டையினை "கிழக்கின் டிராய் " என்று அழைத்தனர்.


செஞ்சிக்கோட்டை

போர்டோ நோவோ என்று அழைக்கப்பட்ட பரங்கிப்பேட்டை, கடலூர் மாவட்டத்தில் உள்ளது. 1830இல் தொடங்கப்பட்ட, முதல் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை இங்கு அமைந்துள்ளது.

W6Q8F8

## மண்டலம் II

### சேலம்

அன்றைய சேலம் மாவட்டமானது, தற்போதைய சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களுடன் இணைந்து இருந்தது. சேலம் என்ற பெயர் "சைலம்" (Sailam) என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "மலைகளால் சூழப்பட்ட பகுதி" என்பதாகும்.


ஒகேனக்கல் அருவி

1934இல் காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணையை ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைப்பர். ஒகேனக்கல் அருவியானது தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அருவிகளில் ஒன்றாகும். இங்கு மூங்கில் பரிசலில் சவாரி செய்வது கூடுதல் ஈர்ப்பைத் தருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒசூர் ஒரு தொழிற்துறை நகரம் ஆகும்.

### கோயம்புத்தூர்

பிரிட்டிஷ் ஆட்சியின்போது, இன்றைய மாவட்டங்களான கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி மற்றும் திண்டுக்கல்லின் ஒரு பகுதி ஆகியவை கோயம்புத்தூர் மாவட்டத்தின்கீழ் இருந்தன.



ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம்

கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது. புகழ்பெற்ற ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்பொழுது இது இந்திராகாந்தி வனவிலங்குச் சரணாலயம் மற்றும் தேசிய பூங்கா என்றும் அழைக்கப்படுகின்றது. ஈரோடு மாவட்டமானது கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிப்பில் புகழ்பெற்று விளங்குகின்றது.

### நீலகிரி

இயற்கை கொஞ்சும் அழகு மற்றும் இனிமையான காலநிலை போன்ற சிறப்பான காரணங்களால், ஐரோப்பியர்களைப் பெரிதும் கவர்ந்த இடமாக நீலகிரி மலை இருந்தது. தென்னிந்தியாவின் நான்காவது மிக உயர்ந்த சிகரமான தொட்டபெட்டா, நீலகிரியிலுள்ள மலைகளில் மிகப் பெரியதாகும்.



மலைகளின் ராணி

தென்னிந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற மலைவாழிடமான உதகமண்டலம், "மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் ஊட்டி ஆகும். மதராஸ் மாகாணத்தின் கோடைகாலத் தலைநகரமாக ஊட்டி இருந்தது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராக இருந்த ஜான் சல்லிவன் ஊட்டியில் அழகான மலை வாழிடத்தை உருவாக்கியதற்காகப் புகழப்படுகிறார்.

A1S9U6

## மண்டலம் III

### திருச்சிராப்பள்ளி

இன்றைய மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்கள் இணைந்து திரிசினோபோலி மாவட்டமாக இருந்தது.



மலைக்கோட்டை

83 மீட்டர் உயரமுள்ள பழமையான ஒரு பாறையின் மீது மலைக்கோட்டை கோயில் கட்டப்பட்டுள்ளது. அக்கோட்டையின் உள்ளே இரண்டு இந்து கோயில்கள் உள்ளன.

ரஞ்சன்குடி கோட்டை பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கோட்டை கர்நாடக நவாபினால் கட்டப்பட்டதாகும்.

கங்கைகொண்ட சோழபுரம் அரியலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கோயிலை யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம், உலகப் புகழ்பெற்ற பாரம்பரியச் சின்னங்களுள் ஒன்றாக அறிவித்துள்ளது. வரலாற்றுக்கு முந்தைய படிமங்களுக்கு அரியலூர் மாவட்டம் பெயர் பெற்றது.

### தஞ்சாவூர்

அன்றைய தஞ்சாவூர் மாவட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய தற்போதைய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

டெல்டா பகுதியாக அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டமானது "தமிழ்நாட்டின் அரிசி கிண்ணம்" என அழைக்கப்படுகிறது. மன்னர் சரபோஜியால் கட்டப்பட்ட, எட்டு அடுக்குகளைக் கொண்ட சிறிய அளவிலான மனோரா கோட்டையானது தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளது.



பிரகதீஸ்வரர் கோயில்

தென்னிந்தியாவில் காவிரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை கி.பி.(பொ.ஆ.) 2ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர் கரிகாலனால் கட்டப்பட்டது.

பிரகதீஸ்வரர் கோயில் அனைவராலும் "தஞ்சை பெரிய கோயில்" என்று அழைக்கப்படுகின்றது.

B8H4F1

## மண்டலம் IV

### மதுரை

முந்தைய மதுரா மாவட்டமானது மதுரை, இராமநாதபுரம், தேனி மேலும் விருதுநகர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகியவற்றின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

மதுரை மாவட்டத்தில் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் அரண்மனை அமைந்துள்ளது. இது திராவிட மற்றும் இஸ்லாமிய கட்டடக்கலைகளின் ஒருமித்த கலவையாகும்.



திருமலை நாயக்கர் அரண்மனை

தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள போடிநாயக்கனூர் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இது "ஏலக்காய் நகரம்" என்றும் அழைக்கப்படுகின்றது.

கீழடி பகுதியானது சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் தொல்லியல் துறை அறிக்கையின்படி, இது சங்க காலத்தில் நகர்ப்புற குடியேற்றப்பகுதியாக இருந்தது என்பதை அறியலாம். இந்தக் கலாச்சார கண்டுபிடிப்பு கி.மு.(பொ.ஆ.மு.) 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

### திருநெல்வேலி

முந்தைய தின்னேவேலி மாவட்டமானது திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகரின் ஒரு பகுதியோடு இணைந்த தற்போதைய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.


குற்றால அருவி

திருநெல்வேலி தாமிரபரணி நதிக் கரையின்மீது அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள குற்றாலம், "தென்னிந்தியாவின் ஸ்பா" (ஆரோக்கிய நீரூற்று) என்று அழைக்கப்படுகிறது.

கட்டபொம்மன் நினைவு கோட்டை தமிழக அரசால் கட்டப்பட்டது. இது தூத்துக்குடியிலிருந்து 21 கி.மீ தூரத்தில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ளது. முத்துக் குளித்தல் என்பது தூத்துக்குடியில் முதன்மையான தொழிலாக இருப்பதால், இந்நகரம் முத்து நகரம் என்றும் அழைக்கப்படுகிறது.

### முடிவுரை

தமிழகம் புகழ்பெற்ற பல சிற்பங்கள், ஓவியங்கள், சுவரோவியங்கள், அலங்காரச் சுவர்கள் மற்றும் தூண்களைக் கொண்டுள்ளது. மேலும், மாபெரும் கோயில் கோபுரங்கள் தமிழக மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. இவை தமிழகத்தின் கலை மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பதுடன், உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

2019ஆம் ஆண்டில் தமிழக அரசு கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களைப் புதிதாக உருவாக்கியுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் இந்த மாவட்டங்களின் எல்லைகள் வரையறுக்கப்படவில்லை.



4th_Term_3_Social_Science_Madras Presidency_Unit_2.indd 120 11/22/2019 5:18:53 PM

## தமிழ்நாடு – அரசியல்



இந்தியா
வடக்கு
மேற்கு
கிழக்கு
தெற்கு
ஆந்திரப் பிரதேசம்
கர்நாடகா
கேரளா
திருவள்ளூர்
சென்னை
காஞ்சிபுரம்
வேலூர்
கிருஷ்ணகிரி
திருவண்ணாமலை
தர்மபுரி
விழுப்புரம்
சேலம்
வங்காள விரிகுடா
நீலகிரி
ஈரோடு
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
நாகப்பட்டினம்
கோயம்புத்தூர்
திருப்பூர்
திருச்சிராப்பள்ளி
கரூர்
தஞ்சாவூர்
திருவாரூர்
நாகப்பட்டினம்
புதுக்கோட்டை
திண்டுக்கல்
தேனி
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
இராமநாதபுரம்
தூத்துக்குடி
இலங்கை
அரபிக் கடல்
திருநெல்வேலி
கன்னியாகுமரி
வரைபடம் அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்

| | வ. எண் | மாவட்டங்கள் | சுற்றுலா தலங்கள் | முக்கியத் தொழில்கள் |
|---|---|---|---|---|
| மண்டலம் I | 1 | சென்னை | மெரினா கடற்கரை | மோட்டார் வாகனங்கள் |
| | 2 | கடலூர் | தில்லை நடராஜர் கோயில், சிதம்பரம் | கைவினைப் பொருட்கள் |
| | 3 | காஞ்சிபுரம் | மகாபலிபுரம் | பட்டு |
| | 4 | திருவள்ளூர் | பழவேற்காடு ஏரி | வேளாண்மை |
| | 5 | திருவண்ணாமலை | அருணச்சலேஸ்வரர் கோயில் | பட்டுநூல் உற்பத்தி |
| | 6 | வேலூர் | வேலூர் கோட்டை | தோல் |
| | 7 | விழுப்புரம் | செஞ்சிச் கோட்டை | சர்க்கரை |
| மண்டலம் II | 8 | கோயம்புத்தூர் | வால்பாறை | பருத்தி, மோட்டார் உற்பத்தி |
| | 9 | தருமபுரி | ஒகேனக்கல் அருவி | தோட்டக்கலை மற்றும் தென்னை நார் |
| | 10 | ஈரோடு | பவானிசாகர் அணை | பருத்தி ஜவுளி |
| | 11 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி நீர்த்தேக்க அணை திட்டம் (கேஆர்பி) | மோட்டார் வாகனங்கள் |
| | 12 | நாமக்கல் | கொல்லிமலை | கோழிப் பண்ணை |
| | 13 | சேலம் | ஏற்காடு | இரும்பு மற்றும் ஜவ்வரிசி |
| | 14 | நீலகிரி | தாவரவியல் பூங்கா | மலர் ஏற்றுமதி |
| | 15 | திருப்பூர் | அமராவதி அணை | ஆயத்த ஆடைகள் |
| மண்டலம் III | 16 | அரியலூர் | கங்கைகொண்ட சோழபுரம் | சிமெண்ட் |
| | 17 | கரூர் | பசுபதீஸ்வரர் கோயில் | காகிதம் மற்றும் ஜவுளி |
| | 18 | நாகப்பட்டினம் | பூம்புகார் | மீன்பிடித்தல் |
| | 19 | பெரம்பலூர் | மயில் ஊற்று அருவி | சர்க்கரை |
| | 20 | புதுக்கோட்டை | சித்தன்னவாசல் | தென்னை நார் |
| | 21 | தஞ்சாவூர் | பிரகதீஸ்வரர் கோயில் | கைவினைப் பொருட்கள் |
| | 22 | திருச்சிராப்பள்ளி | மலைக்கோட்டை | நவரத்தினம் வெட்டுதல் |
| | 23 | திருவாரூர் | தியாகராஜர் ஆலயம் | உணவுப் பொருட்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் |
| மண்டலம் IV | 24 | திண்டுக்கல் | கொடைக்கானல் | பூட்டுகள் மற்றும் எஃகு பாதுகாப்பு பெட்டகங்கள் |
| | 25 | கன்னியாகுமரி | விவேகானந்தர் நினைவுப் பாறை | மர தளவாடங்கள் மற்றும் இரப்பர் |
| | 26 | மதுரை | மீனாட்சி அம்மன் கோயில் | விவசாய கருவிகள் உற்பத்தி |
| | 27 | இராமநாதபுரம் | பாம்பன் தீவு, இராமேஸ்வரம் | பாதுகாக்கப்பட்ட கடல் உணவு, பனை கைவினைப்பொருட்கள் |
| | 28 | சிவகங்கை | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் | சர்க்கரை |
| | 29 | தேனி | சுருளி அருவி, வைகை அணை | நறுமணப் பொருட்கள் |
| | 30 | தூத்துக்குடி | திருச்செந்தூர் முருகன் கோயில் | உரம் |
| | 31 | திருநெல்வேலி | குற்றாலம் | குடிசைத்தொழில் |
| | 32 | விருதுநகர் | அய்யனார் அருவி | பருத்தி மற்றும் சிமெண்ட் |

**குறிப்பு**

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, ஆசிரியர்களின் குறிப்புக்கு மட்டுமே. பள்ளி அமைந்துள்ள மாவட்டத்தின் சுற்றுலா இடங்கள் மற்றும் முக்கிய தொழில்களைப் பற்றி மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




தமிழ்நாடு வரைபடத்தில், உங்கள் சொந்த மாவட்டத்தை வண்ணமயமாக்கி, அதன் அண்டை மாவட்டங்களைக் குறிக்கவும்.




- ❖ மதராஸ், செங்கல்பட், வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திரிசினோபோலி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தின்னேவேலி, மதுரா, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் தற்போதைய தமிழ்நாட்டில் உள்ளன.
- ❖ மலபார் மாவட்டம் தற்போதைய கேரள மாநிலத்திற்கு உட்பட்டதாகும்.
- ❖ சித்தூர், நெல்லூர், கடப்பா, அனந்தபூரின் ஒரு பகுதி, குண்டூர், கர்னூல், கிஸ்ட்னா, கிழக்கு கோதிவரி, மேற்கு கோதிவரி மற்றும் விசாகப்பட்டணம் ஆகியவை தற்போதைய ஆந்திராவில் உள்ள பகுதிகளாகும்.
- ❖ கஞ்சம் மாவட்டம் தற்போதைய ஒடிசாவில் உள்ளது.
- ❖ பெல்லாரி மாவட்டம், தென் கனரா மற்றும் அனந்தபூரின் ஒரு பகுதி ஆகியவை தற்போதைய கர்நாடகாவில் இணைக்கப்பட்டுள்ளன.

## சொற்களஞ்சியம்

1. மாகாணம் – நிர்வாகப் பிரிவு
2. கல்வெட்டுகள் – உலோகம் அல்லது பாறையில் எழுதப்பட்டவை
3. வானியல் ஆய்வுக்கூடம் – பிரபஞ்சத்தைப் பற்றி அறிய விஞ்ஞானிகள் பயன்படுத்தும் பெரிய தொலைநோக்கி கொண்ட ஒரு கட்டிடம்.
4. டெல்டா பகுதி – பெரிய நதி, சிறிய பகுதிகளாகப் பிரிக்கின்ற ஒரு பகுதி (முக்கோணப் பகுதி).
5. பாரம்பரியச் சின்னம் – சிறப்பு நபர் அல்லது நிகழ்வைக் கௌரவிக்க கட்டப்பட்ட ஒரு கட்டமைப்பு.
6. சுவரோவியங்கள் – சுவரில் வரையப்பட்ட ஓர் ஓவியம்.
7. உலக பாரம்பரிய தளம் – சிறந்த பண்பாட்டு மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்.

K2T5D6

# மதிப்பீடு

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மதராஸ் மாகாணம் _____________இல் உருவாக்கப்பட்டது.

   அ) 1800 ஆ) 1801

   இ) 1802 ஈ) 1803

2. மதராஸ் மாநிலம் அதிகாரப்பூர்வமாக _____________இல் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது.

   அ) 1947 ஆ) 1953

   இ) 1956 ஈ) 1969

3. மாமல்லபுரம் _____________ வம்சத்தினரால் உருவாக்கப்பட்டது.

   அ) நாயக்கர் ஆ) பல்லவ

   இ) சோழ ஈ) ஆங்கிலேய

4. "தென்னிந்தியாவின் ஸ்பா" என்று அழைக்கப்படுவது எது?

   அ) போடிநாயக்கனூர் ஆ) ஒகேனக்கல்

   இ) குற்றாலம் ஈ) செஞ்சிக் கோட்டை

5. எட்டு அடுக்கிலான மிகச் சிறிய அளவிலுள்ள மனோரா கோட்டையைக் கட்டியவர் _____________ஆவார்.

   அ) சரபோஜி மன்னர் ஆ) சின்ன பொம்மி நாயக்கர்

   இ) திம்மா ரெட்டி நாயக்கர் ஈ) திருமலை நாயக்கர்

## II. சரியா, தவறா என எழுதுக.

1. மதராஸ் மாகாணத்தின் தலைநகரம் மதராஸ் நகரம் ஆகும். (  )

2. சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள உத்திரமேரூர், பழங்கால சோழர்களின் கிராமமாகும். (  )

3. திருமலை நாயக்கர் அரண்மனை திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. (   )

4. கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது. (   )

5. கங்கைகொண்ட சோழபுரம் கோயில், தஞ்சை பெரிய கோயில் எனவும் அறியப்படுகிறது. (   )

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. காவலூர் | – | கிழக்கின் டிராய் |
| 2. செஞ்சிக் கோட்டை | – | ஊட்டி |
| 3. போடிநாயக்கனூர் | – | வைணு பாப்பு ஆய்வகம் |
| 4. முத்து நகரம் | – | ஏலக்காய் நகரம் |
| 5. ஜான் சல்லிவன் | – | தூத்துக்குடி |

## IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. செஞ்சிக் கோட்டையின் முக்கியத்துவத்தைக் கூறுக?
2. திருமலை நாயக்கர் அரண்மனையின் முக்கிய அம்சங்கள் யாவை?
3. சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள சில சுற்றுலாத் தலங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. கல்லணை – குறிப்பு வரைக.
5. மலைக் கோட்டை – குறிப்பு வரைக.
6. தமிழ்நாட்டின் சில சுற்றுலாத் தலங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**செயல்திட்டம்**

உங்கள் மாவட்டத்தில் உள்ள முக்கிய நினைவுச்சின்னங்கள் / வரலாற்று இடங்களின் படங்களை ஒட்டுக.






# குழந்தைகளின் உரிமைகள் மற்றும் கடமைகள்



## கற்றல் நோக்கங்கள்

N9A3W9



மாணவர்கள் கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்

- ஒரு நாட்டின் குடிமகனைப் பற்றி வரையறுத்தல்
- குழந்தைகளின் உரிமைகளைப் பட்டியலிடுதல்
- உயிர்வாழ்வதற்கான உரிமையை விவரித்தல்
- வளர்ச்சிக்கான உரிமையை விளக்குதல்
- பாதுகாப்பு மற்றும் பங்கேற்பதற்கான உரிமை பற்றிய விவரங்களைக் கொடுத்தல்





4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 126 11/22/2019 7:21:52 PM

# அறிமுகம்

பள்ளியில் ரமேஷுக்கு இன்றைய நாள் ஓர் உற்சாகமான நாளாக அமைந்தது. வகுப்பில் பின்பற்ற வேண்டிய பல விதிமுறைகளை அவன் கற்றுக்கொண்டான். அவனது வகுப்பில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தன் தாயிடம் பகிர்ந்து கொண்டதைக் காண்போம்.



அம்மா, நாங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளின் பட்டியலை இன்று எங்களின் வகுப்பு ஆசிரியர் வழங்கியுள்ளார்.



நன்று!



பள்ளியில் வகுப்பு நேரத்தின் இடையில் எங்கள் இருக்கைகளை மாற்றக்கூடாது, அது மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கும். இதைப் போலவே, பல விதிமுறைகள் உள்ளன அம்மா!



விதிமுறைகள் மிகவும் முக்கியமானவை என்று நான் நினைக்கிறேன். மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல், வகுப்பு ஒழுங்காக செயல்படத்தான் விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.



எனக்குப் புரிகிறது. எங்கள் ஆசிரியரும் அவ்வாறே கூறினார்.

www.tntextbooks.in

நாட்டின் அனைத்துக் குடிமக்களும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பல உள்ளன என்பது உனக்குத் தெரியுமா?





குடிமகன் என்பதற்கு என்ன பொருள், அம்மா?

**குடிமகன்** என்பது ஒரு நாட்டின் உறுப்பினராக இருக்கும் ஒரு நபர் ஆவார். ஒரு குடிமகன், நாடு தனக்கு வழங்கியுள்ள உரிமைகளை அனுபவிப்பவன் ஆவான்.





சரி! இந்த விதிமுறைகளைக் குடிமக்களுக்காக அமைப்பது யார்?




இந்தியக் குடியுரிமையைப் பெற ஒரு வெளிநாட்டவர் எத்தனை ஆண்டுகள் இந்தியாவில் குடியிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஒரு வெளிநாட்டவர் இந்தியக் குடியுரிமையைப் பெற 12 ஆண்டுகள் இந்தியாவில் குடியிருக்க வேண்டும்

- இந்த விதிமுறைகளை இந்திய அரசியலமைப்பு அமைக்கிறது.
- ஒரு நாட்டின் விதிமுறைகளின் தொகுப்பு அரசியலமைப்பு என அழைக்கப்படுகிறது.
- ஒரு நாடு சீராக இணைந்து செயல்பட அரசியலமைப்பு சில விதிமுறைகளை வகுக்கிறது.






இந்திய அரசியலமைப்பு உலகின் மிக நீளமான அரசியலமைப்பு ஆகும். இவற்றின் அசல் ஆவணம் கையால் எழுதப்பட்டதாகும்.



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 128 11/22/2019 7:21:56 PM



அதனால்தான், இந்த விதிமுறைகளைப்பின்பற்றினால் நாங்கள் பொறுப்பு மிக்கவர்களாவோம் என்று எனது ஆசிரியர் கூறினார். அரசியலமைப்பு குடிமக்களைப் பொறுப்புமிக்கவர்களாக உருவாக்குகிறதா?

ஆம். இது நம் நாட்டின் அனைத்து மக்களையும் பொறுப்புமிக்க குடிமக்களாக்க உதவுகிறது.



## குழந்தைகளின் உரிமைகள்

R6C8P2

உலகம் முழுவதும், வெவ்வேறான கொள்கைகள் மற்றும் உரிமைகள் உள்ளன. ஒவ்வொரு குழந்தையும் சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்ய குழந்தைகளுக்காகச் சில உரிமைகள் உள்ளன. குழந்தைகள் வாழ்வதற்காகவும், ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்காகவும் இவ்வுரிமைகள் நடைமுறையில் உள்ளன. காவ்யாவும் அவளது தந்தையும் குழந்தைகளின் உரிமைகளைப் பற்றி பேசுவதைப் பார்ப்போம்.



அப்பா! குழந்தைகளுக்கு ஏதேனும் உரிமைகள் உள்ளனவா?

ஆம் காவ்யா. உலகம் முழுவதும் பல நாடுகள் குழந்தைகளுக்காகச் சில அடிப்படை உரிமைகளை உருவாக்க ஒப்புக் கொண்டன. அவற்றில் நம் நாடும் ஒன்று.





உண்மையாகவா? அப்பா, இதைப்பற்றி மேலும் விளக்கமாகக் கூற முடியுமா?

நிச்சயமாக. குழந்தைகளுக்கான நான்கு முக்கிய உரிமைகள் உள்ளன. அவை,

1. உயிர்வாழ்வதற்கான உரிமை
2. வளர்ச்சிக்கான உரிமை
3. பாதுகாப்பு உரிமை
4. பங்கேற்பதற்கான உரிமை





## உயிர்வாழ்வதற்கான உரிமை



அப்பா, உயிர்வாழ்வதற்கான உரிமை பற்றி விளக்க முடியுமா?

இது ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தபட்சம், தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதாகும். மேலும் இது, அனைத்துக் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகிறது. 6 வயதிற்குட்பட்ட மற்றும் 6–14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பல்வேறு உரிமைகள் உள்ளன. ஏனெனில், இரு பிரிவு வயதினரின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தேவைகள் வேறுபடுகின்றன.







மிகவும் ஆர்வமாக உள்ளது. உயிர்வாழ்வதற்கான உரிமை பற்றி வேறு என்ன செய்தி உள்ளது?

வாஷ் (WASH) திட்டமும் அதன் ஒரு பகுதியாகும். அதைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?





வாஷ்? அந்தத் திட்டத்தில் என்ன செயல்பாடு நடைபெறுகிறது, அப்பா?



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 130 11/22/2019 7:21:59 PM

வாஷ் (Wash) என்பது நீர் (Water), சுகாதாரம் (Sanitation) மற்றும் தூய்மையைக் (Hygiene) குறிக்கும். குடிநீர் மற்றும் பிற தேவைகளுக்குச் சுத்தமான நீர் கிடைக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். நீர் மூலம் பரவும் நோய்கள் பல உள்ளன. எனவே அந்நோய்களைத் தவிர்க்க, பாதுகாப்பான நீரைப் பெறுதல் என்பது மிக அவசியமாகும்.





ஆம் அப்பா. உணவுக்கு முன்பும் பின்பும் கைகளைக் நன்றாகக் கழுவ வேண்டும் என்று என் ஆசிரியர்கூடக் கூறினார்.

மிகவும் நல்லது. கைகளை சோப்பைக் கொண்டு கழுவுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் வாஷ் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.





எதிர்வீட்டுக் குழந்தை முத்து, கடந்த வாரம் சில துளிகள் மருந்து உட்கொள்வதை நான் பார்த்தேன். இது உயிர்வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதியா, அப்பா?

ஆம் காவ்யா. அது இளம்பிள்ளை வாதத்திற்கான (Polio drops) மருந்து. சில நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க, அவர்களுக்குப் பல வகையான தடுப்பூசிகள் (Vaccines) மற்றும் சொட்டு மருந்துகள் (Drops) வழங்கப்படுகின்றன.





மிகவும் அருமை, அப்பா.

U3X5K5

## வளர்ச்சிக்கான உரிமை

ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளி செல்லவும், தன் வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உரிமை உண்டு. குழந்தைகளின் வளர்ச்சிக்கான உரிமை பற்றி ஆசிரியர் விஜயா அவர்கள் இன்று கற்பிக்கிறார்.



www.tntextbooks.in

மித்ரா, பள்ளிக்கு வருவது உங்களுடைய உரிமை என்பது உனக்குத் தெரியுமா? அரசு பள்ளியில் நீங்கள் சேர்க்கை பெறுவதை யாராலும் தடுக்க இயலாது என்பதை நீ அறிவாயா?





உண்மையாகவா? எனது வீட்டிற்கு அருகில், பள்ளிக்குச் செல்லாத சில குழந்தைகளை நான் பார்க்கிறேன்.

ஆம், நீ பார்க்கலாம். ஆனால், 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிக்குச் செல்வதற்கான உரிமை உள்ளது. அனைவருக்கும் இலவசக் கல்வியை வழங்குவது அரசின்(Government) கடமையாகும்.





அப்படியா, நான் அவர்களின் பெற்றோர்களுக்கு இதைத் தெரிவித்து, அக்குழந்தைகளை நாளை பள்ளிக்கு அழைத்து வருவதற்கு முயற்சி செய்கிறேன்.

அது மிகவும் நல்லது, மித்ரா!






**சிந்தித்து எழுதுக.**

பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளைக் கண்டால், நீ என்ன செய்வாய்?

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 132 11/22/2019 7:22:06 PM




குழந்தைத் தொழிலாளிகள்

படத்தில் என்ன காண்கிறீர்கள்?

குழந்தைகள் பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை குழந்தைத் தொழிலாளர்கள் (Child labour) என அழைக்கின்றோம். 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலை செய்யக் கட்டாயப்படுத்துவது சட்டவிரோதமானது ஆகும்.

உண்மையாகவா? குழந்தைத் தொழிலாளர்களாக வேலை செய்யும் குழந்தைகளைக் கண்டால், நாம் என்ன செய்ய வேண்டும்?

சிறார் உதவி மைய எண் – Childline Number

குழந்தைகளுக்கான உதவி எண் – 1098 (பத்து ஒன்பது எட்டு) ஐ அழைத்துத் தெரிவிக்க வேண்டும்.



சரி. இந்த எண்ணை எந்த நேரத்திலும் நான் தொடர்பு கொள்ளலாமா? அதற்கு எவ்வளவு கட்டணம் ஆகும்?



நீங்கள் எந்த நேரத்திலும் இந்த எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். மேலும், அந்த அழைப்பிற்குக் கட்டணம் கிடையாது.

நீங்கள் ஒரு குழந்தைத் தொழிலாளியைக் கண்டால், முதலில் அவன் அல்லது அவளுடன் பேசுங்கள். அவர்கள் அந்த வேலையைச் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டிருந்தால், நீங்கள் சிறார் உதவி மைய எண்ணுடன் தொடர்பு கொண்டு அத்தகவலைத் தெரிவிக்கலாம். அவர்கள் அக்குழந்தைக்கு உதவுவார்கள்.

### செயல்பாடு

உங்கள் வீட்டின் அருகில், பள்ளிக்குச் செல்லாத ஒரு குழந்தையை அடையாளம் காணவும். இக்கேள்வித்தாளைப் பூர்த்தி செய்யவும்.

1. குழந்தையின் பெயர்: ________________
2. குழந்தையின் வயது: ________________
3. இந்நாள்வரை அக்குழந்தை பள்ளிக்குச் சென்றுள்ளதா?: ஆம் / இல்லை
4. பள்ளிக்குச் செல்லாததற்கான காரணம்: ________________
5. அவள் / அவனை நீங்கள் எவ்வாறு வழிநடத்துவீர்கள்? : ________________

**குறிப்பு**

இந்தக் கணக்கெடுப்பு பெற்றோர்களுக்கும் அக்குழந்தைக்குமானது. அந்த வகுப்பு குழந்தைகள் இருவர் கொண்ட குழுக்களாக, ஒரு குடும்பம் அல்லது குழந்தையைப் பேட்டி காணவும். ஒவ்வொரு நிலைபாட்டிற்கும் தீர்வுகள் குறித்து ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடலாம்.

## பாதுகாப்பு உரிமை

அனைத்து சூழ்நிலைகளிலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற உரிமை குழந்தைகளுக்கு உள்ளது. இந்திய அரசு இதற்கான சட்டங்களை உருவாக்கியுள்ளது. இராமன் மற்றும் கவிதாவின் தாய் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையைப் பற்றி, அக்குழந்தைகளிடம் கலந்துரையாடுவதைக் கேட்போம்.

X1I2G8



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 134 11/22/2019 7:22:12 PM

உங்கள் உடலில் எவரும் தொடக்கூடாத பகுதிகள் எவை என்பதைக் கூறுங்கள்?





உதடுகள், மார்பு மற்றும் என் கால்களுக்கு இடையில்.

ஆம்! உடலின் இப்பகுதிகளில் யாராவது உங்களைத் தொட்டால், நீங்கள் யாரிடம் கூறுவீர்கள்?





உங்களைப் போலவே நம்பிக்கைக்குரிய, வயதில் மூத்த ஒரு பெரியவரிடம் கூறுவோம்.

உடலின் இப்பகுதிகளில் ஏதேனும் ஒன்று அல்லது அனைத்துப் பகுதிகளிலும் அல்லது வேறு ஏதாவது பகுதியில் யாராவது உங்களைத் தொட்டால் நீங்கள் பயப்படுவீர்களா?





இல்லை அம்மா. நான் பயப்பட மாட்டேன்.



ஆம். மேலும், நான் என் குரலின் உச்சத்தில் கத்தி உதவிக்காகக் கூச்சலிடுவேன்.

குழந்தைகளைத் தகாத முறையில் தொடும் நபர்களை தண்டிக்கச் சட்டங்கள் உள்ளன. நீங்கள் செய்ய வேண்டியவை, ஆபத்திலிருந்து விலகி நம்பிக்கையுடன் இருத்தலே ஆகும்.





எங்களைப் பாதுகாக்க வேறு விதிமுறைகள் ஏதாவது உள்ளனவா?

www.tntextbooks.in

ஆம். எந்த நபரும் குழந்தைகளைத் தாக்கவோ அல்லது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கவோ கூடாது என்ற மற்றொரு விதிமுறையும் உள்ளது.





உண்மையாகவா?

ஆம். குழந்தைகள் பாதுகாப்பான சூழலில் வாழ, அச்சூழ்நிலையை உருவாக்க பெரியவர்களும் உதவ வேண்டும்.



## பங்கேற்பதற்கான உரிமை

குழந்தைகள், அவர்களுக்குத் தொடர்பான நிகழ்வுகளில் பங்கேற்க உரிமை உள்ளது. அவற்றைப் பற்றிக் கேள்விகள் கேட்டல், கருத்துக்களைப் பகிர்தல் மற்றும் அவர்களைப் பாதிக்கக்கூடிய செயல்பாடுகளில் அவர்களே முடிவெடுத்தல் ஆகியன அடங்கும். இவை குறித்து வகுப்பில் நடைபெறும் கலந்துரையாடலைக் கவனிப்போம்.



நம் பள்ளியைப் புதுப்பிக்க உள்ளோம். பள்ளியை மேம்படுத்த உங்கள் பரிந்துரைகள் அல்லது கருத்துக்கள் எங்களுக்குத் தேவை. அனைவரும் விவாதித்து ஒரு பட்டியலை உருவாக்க முடியுமா?





அப்படியே செய்கிறோம்.

(சிறிது நேரம் கழித்து)



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 136 11/22/2019 7:22:15 PM

பள்ளியைப் புதுப்பித்தலுக்கான எங்களின் பரிந்துரைகள் பின்வருமாறு:–

1. நம் பள்ளியில் ஒவ்வொரு தளத்திலும் கழிப்பறைகள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு நான்கு வகுப்பறைகளுக்கும் குடிநீர் வசதி வேண்டும்.
3. நாங்கள் அனைவரும் விளையாடுவதற்கு ஏதுவாக, விளையாட்டு அறையில் கேரம் போர்டுகள் (Carrom boards), சதுரங்கப் பலகைகள் (Chess boards), பந்துகள் மற்றும் பூப்பந்து இறகுகள் (Badminton racquets) அதிக அளவில் வேண்டும்.



அற்புதமான யோசனைகள். இவற்றை நான் தலைமை ஆசிரியருக்கு அனுப்புகின்றேன்.





நன்றி

நீங்கள் அனைவரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்று, உங்கள் கருத்துக்களைத் தெரிவித்தது மிகவும் சிறப்பாக இருந்தது. இதுவும் உங்களுடைய உரிமையாகும்.






குழந்தைகளுக்கு அவர்கள் தொடர்பான அனைத்துச் செயல்பாடுகளிலும் கலந்துரையாடவும் அவற்றைச் செயல்படுத்தவும் உரிமை உண்டு.

## சொற்களஞ்சியம்

1. புதுப்பித்தல் – சரிசெய்து மேம்படுத்துதல்
2. உயிர் வாழ்தல் – தொடர்ந்து வாழ்வதற்கான நிலை
3. தடுப்பூசி – சில நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்க உதவும் மருந்து
4. பாதுகாப்பு – சில தீமைகளிலிருந்தும் காயங்களிலிருந்தும் காத்தல்
5. பொருத்தமற்றது – சரியானதன்று



4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 137 11/22/2019 7:22:15 PM

## நினைவு கூர்க

- ❖ நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் உரிமைகளை அனுபவித்து, கடமைகளைச் செய்தல் வேண்டும்.
- ❖ குழந்தைகளுக்குச் சிறப்பு உரிமைகள் உள்ளன.
- ❖ குழந்தைகள் தம் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக, ஆரோக்கியமான உணவைக் கொண்டிருப்பதற்கான உரிமை உண்டு.
- ❖ குழந்தைகளுக்கு பள்ளிக்குச் செல்லவும், நல்ல கல்வியைப் பெறவும் உரிமை உண்டு.
- ❖ ஆபத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற உரிமை குழந்தைகளுக்கு உண்டு.
- ❖ குழந்தைகள் தொடர்பான செயல்களில் பங்கேற்க, அவர்களுக்கு உரிமை உண்டு.

Q9Z4D6



## மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. _____________ இந்திய சட்டத்திற்கு எதிரானது.

அ. பள்ளியில் குழந்தைகள் படித்தல்.

ஆ. தொழிற்சாலைகளில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வேலை செய்தல்.

இ. பள்ளி செயல்பாடுகளில் குழந்தைகள் பங்கேற்றல்.

ஈ. குழந்தைகள் தரமான உணவைப் பெறுதல்.

2. போலியோ சொட்டு மருந்து _____________களுக்கு வழங்கப்படுகின்றன.

அ. ஆண் ஆ. பெண் இ. குழந்தை ஈ. மூத்த குடிமக்கள்

3. ஒரு நாட்டின் விதிமுறைகளின் தொகுப்பை _____________ என்பர்.

அ. கதைப் புத்தகம் ஆ. விதிமுறைப் புத்தகம்

இ. அரசியலமைப்பு ஈ. பாடநூல்

4. பின்வருவனவற்றில் எது குழந்தைகளின் உரிமை இல்லை?

அ. ஓட்டுநர் உரிமம் பெறுதல்

ஆ. கல்வி பெறுதல்

இ. போதுமான உணவைப் பெறுதல்

ஈ. ஆரோக்கியமாக வாழ்தல்

## II. சரியா, தவறா என எழுதுக.

1. போலியோ சொட்டு மருந்தைப் பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை ஆகும். (          )
2. அனைத்து வயது குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான உரிமைகள் உள்ளன. (          )
3. 6 முதல் 14 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளும் வேலை செய்ய வேண்டும். (          )
4. குழந்தைகளைத் துன்புறுத்துவது தவறானது. (          )
5. குழந்தைகள் தவறான தொடுதலை அறிந்திருக்க வேண்டும். (          )

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. சிறார் உதவி மைய எண் | – | ஒரு நாட்டின் உறுப்பினர் |
| 2. தடுப்பூசிகள் | – | சுகாதாரம் |
| 3. வாஷ் (WASH) | – | சட்டவிரோதமானது |
| 4. குடிமகன் | – | நோய்களிலிருந்து பாதுகாப்பு |
| 5. குழந்தைத் தொழிலாளர் | – | 1098 |

## IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. உங்கள் உடலில் யாரும் தொடக்கூடாத மூன்று பகுதிகள் யாவை?
2. குழந்தைகளாகிய உங்களுக்கு உள்ள பல்வேறு உரிமைகள் யாவை?
3. உயிர்வாழ்வதற்கான உரிமை – குறிப்பு வரைக.
4. பங்கேற்பதற்கான உங்கள் உரிமையை எப்போதாவது நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்களா? விவரிக்க.
5. உரிமைகள் முக்கியமானவை. ஏன்?

### செயல்திட்டம்

இந்த பாடத்தில் விவாதிக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகளில், தேவையை மையமாகக் கொண்ட ஏதேனும் ஓர் உரிமையை 5 நபர்கள் கொண்ட குழுக்களாக சேர்ந்து ஒரு சிறிய நாடகமாக நடித்துக் காட்டவும்.





4th_Term_3_Social Science_Rights and duties_Unit_3_TM.indd 139 11/22/2019 7:22:19 PM

# வகுப்பு IV – கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் (பருவம் 3, தொகுதி 2)
## மேலாய்வாளர்கள், நூலாசிரியர்கள் பெயர் பட்டியல்

### கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத் திட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பலூர், அரியலூர் மாவட்டம்.

### பாட ஒருங்கிணைப்பாளர்கள்

#### கணிதம்

**ம. கி. லலிதா**
பட்டதாரி ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
காட்பாடி, வேலூர் மாவட்டம்.

#### அறிவியல்

**மு. செல்வி**
பட்டதாரி ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
பானவரம், வேலூர் மாவட்டம்.

#### சமூக அறிவியல்

**ச. விஜயலட்சுமி**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
கூவத்தூர், காஞ்சிபுரம்.

### கலை மற்றும் புத்தக வடிவமைப்புக் குழு

அடிசன் ராஜ் அ
பக்கிரிசாமி அண்ணாதுரை,
அடைக்கல ஸ்டீபன். சி
யுவராஜ்
வி. வினோத் குமார்
அ.டேனியல்
பொற்செல்வன்

### தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்
அருண் காமராஜ் ப

### அட்டைப்பட வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பாளர்

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி,
சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**எஸ். ரவி**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
அழகிய மணவாள
மண்ணச்சநல்லூர், திருச்சி.

**எம். சங்கர் கணேஷ்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலூர், விழுப்புரம்.

**ஜ. மஹாலக்ஷ்மி**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
செம்பியாக்குடி, அரியலூர்

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**ஞா. ஏஞ்சலின் ரூபி**
உதவிப் பேராசிரியர்
SCERT, DPI
சென்னை

**பா. செல்வி**
உதவிப் பேராசிரியர்
SCERT, DPI
சென்னை

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
பெரியார் நகர், நந்தம்பாக்கம்,
காஞ்சிபுரம்,

**தெ. அசோக்,**
முதுகலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல் நிலை பள்ளி
பொன்னேரி, திருவள்ளூர்

### பாட நூலாசிரியர்கள்

**க. விஜயராஜ்குமார்,**
முதுகலை ஆசிரியர்,
ஈஷா வித்யா மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி,
சாமிசெட்டிபட்டி, தருமபுரி.

**வி. காமாட்சி,**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வடவம்பாலம், கண்டமங்கலம் (ஒ),
விழுப்புரம்.

**எம். மரியநேசன்,**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
தென்னவராயன் பட்டு,
விழுப்புரம்

**ந. அகிலா,**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆத்திக்குடிக்காடு,
அரியலூர்.

**சந்திரா நூசிலின்,**
**மாயா மார்டன்சு,**
**ரிபு வொஹ்ரா**
WasteLess, ஆரோவில்

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்

**சு. கோமதி மாணிக்கம்**
பட்டதாரி ஆசிரியை,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்

**பெ. சுரேஷ்**
முதுகலை ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
ஆத்தூர், சேலம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி அறக்கட்டளை,
சென்னை.

**செ. ஞான தினகராஜ்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
உமையாள் பரணச்சேரி,
காஞ்சிபுரம்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,**
இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**சூ. ஆல்பர்ட் வளவன் பாபு,**
பட்டதாரி ஆசிரியர்,
அ. உ. பள்ளி, பெருமாள் கோவில்,
பரமக்குடி, இராமநாதபுரம்.

**ம.முருகேசன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி,
பெத்தவேளாண் கோட்டகம்
முத்துப்பேட்டை, திருவாரூர்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப் லித் தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது.
வெப் ஆப்செ ட் முறையில் அச்சிட் டோர்: